# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.வி.மு.ச. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8076845

C

1. District / மாவட்டம் : கடலூர்   PS / காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு   Year / ஆண்டு : 2021   FIR No / மு.த.அ. எண் : 13/2021   Date / நாள் : 07.10.2021

2. (i) Act சட்டம் : The Prevention of Corruption   Sections பிரிவுகள் : 7, 12

   (ii) Act சட்டம் : (Amendment) Act 2018   Sections பிரிவுகள் :

   (iii) Act சட்டம் :   Sections பிரிவுகள் :

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்   Date from / நாள் முதல் : 30.04.2020   Date to / நாள் வரை :

   Time Period / நேர அளவு   Time from / நேரம் முதல் :   Time to / நேரம் வரை :

   (b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 08.02.2021   Time / நேரம் : 1100 hrs

   (c) General Diary Reference Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : Voi - I   Time / நேரம் : 1100 hrs

4. Type of Information : Written/ Oral : கணினி தட்டச்சு
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 40 கி.மீ. தென்மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number / முறைக் காவல் எண் :   (b) Address / முகவரி : நயினார்க்குப்பம் கிராமத்தில் உள்ள ரங்கநாதன் என்பவரின் வீடு

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : --   District : --
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S.மாலா   (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் :

   (c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு :   (d) Nationality / நாட்டினம் : இந்தியன்   (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : ———

   Date of Issue / வழங்கப்பட்ட நாள் : ———   Place of Issue / வழங்கப்பட்ட இடம் :

   (f) Occupation / தொழில் : காவல் ஆய்வாளர்,   (g) Address / முகவரி : ஊ.த.க. பிரிவு கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு.N.நந்தகுமார், த/பெ நல்லதம்பி, தலைவர், N.N.குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மருவாய் கிராமம், கடலூர் மாவட்டம்.
   2) திரு.V.ரங்கநாதன், த/பெ வரதராஜன், 110/2,முருகன் கோவில் தெரு, நயினார்குப்பம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.
   3) திருமதி.R.தங்கம்மாள், க/பெ ரங்கநாதன், 110/2,முருகன் கோவில் தெரு, நயினார்குப்பம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   முதல்நிலை விசாரணை நடத்தப்பட்டது. (PE 14/2021/COOP/CL)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

திருமதி.M.திலகவதி, வயது 59/2021, க/பெ மதிவேந்தன், 25/1, வடக்கு தெரு, அரங்கமங்கலம் அஞ்சல், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவரின் 10.11.2020 தேதியிட்ட புகார் மனுவின் பேரில், 08.02.2021 ஆம் தேதி முதல்நிலை விசாரணை PE 14/2021/COOP/CL பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் முடிவில், குற்ற வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், குற்றச்சாட்டில் தொடர்புடைய அரசு அலுவலர் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய தகுந்த அலுவலரிடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. குற்ற அலுவலர்–1 திரு.நந்தகுமார் என்பவர் சம்பவம் நடைபெற்ற காலத்தில் சட்டப்பிரிவு 2 (c) ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன் படி பொது ஊழியர் ஆவார்.

(தொடர்ச்சி பக்கம் -3)

Tr. S. Thiruvangadam, Inspector of police, V&AC, CDD.

S. Mala 07/10/2021

S. MALA.
Inspector of police.
V&AC, CDD.

07.10.2021 at 12.00 hrs.

எதிரி–2 திரு.V.ரங்கநாதன் மற்றும் எதிரி–3 திருமதி.R.தங்கம்மாள் ஆகிய இருவரும் தனிநபர் ஆவார்கள்.

<u>இவ்விசாரணையின் விபரம் பின்விருமாறு :-</u>

புகார்தாரர் திருமதி.M.திலகவதி என்பவர் நாராயண நயினார்க்குப்பம் [N.N.குப்பம்] (இ.2661)தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் [தொ.வே.கூ.க.ச] எழுத்தராக பணிபுரிந்து, வயது முதிர்வின் காரணமாக 30.04.2020 அன்று பணி ஒய்வு பெற்றுள்ளார். பணி ஒய்வின் போது அவருக்கு ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புக்கான தொகை ரூ.2,56,984/–, வருங்கால வைப்பு நிதி ரூ.8,21,878/– மற்றும் பணிக்கொடை ஆகியவை வழங்கப்படவேண்டும். இத்தொகைகள் காசோலைகளாக திருமதி.M.திலகவதி–க்கு வழங்கப்படும். அக்காசோலைகளில் சங்கத்தின் தலைவரும், சங்கத்தின் செயலாளரும் கையொப்பம் செய்து திருமதி.M.திலகவதி–க்கு வழங்க வேண்டும். நாராயண நயினார்க்குப்பம் [N.N.குப்பம்] (இ.2661) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் தலைவராக நந்தகுமார் அவர்கள், 11.08.2018 ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறார்.

ஏப்ரல்/2020 மாதம் முதல் வாரத்தில் நந்தகுமார் அவர்கள், திலகவதி அவர்களிடம் " உங்களுக்கு ஒய்வு கால பலனாக சுமார் 15,00,000/– வரவுள்ளது, அதற்கான செக்குகளில் நான் கையொப்பம் செய்துதான் வழங்க வேண்டும், எனவே எனக்கு ஒரு லட்சம் கொடுக்க வேண்டும் " என கேட்டுள்ளார்.

30.04.2020 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நாராயண நயினார்க்குப்பம் [N.N.குப்பம்] தொ.வே.கூ.க.சங்கத்தில் நடைபெற்ற சங்கத்தின் நிர்வாக குழு கூட்டத்தில், திலகவதி அவர்கள் ஒய்வு பெறுவதை அங்கீகரித்தும், அவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகைகளை வழங்குவதற்கும் ஒருமனதாக அனைவராலும் ஏற்றுகொள்ளப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. திலகவதி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைகளுக்கான காசோலைகளை சங்கத்தின் செயலாளர் எழுதி, கையொப்பம் இட்டு வைத்திருந்த காசோலைகளிலும், திலகவதியின் பணி ஒய்விற்கான உத்தரவிலும், கூட்டத்தில் கலந்து கொண்ட சங்கத்தின் தலைவர் நந்தகுமார் அவர்கள், கையொப்பம்

S. Elala
07/10/2021
Inspector of Police
V&AC, CUD.

செய்து வழங்காமல், அவருடைய வீட்டிற்கு புறப்பட்டு சென்றுள்ளார். இதனால் புகார்தாரர் திலகவதி, அன்றே (30.04.2020) மாலை சுமார் 05.00 மணியளவில், சங்கத்தின் தலைவர் நந்தகுமார் கையொப்பம் இட வேண்டிய வருங்கால வைப்பு நிதி ரூ.8,21,878/–க்கான காசோலை, ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு தொகை ரூ.2,56,984/– க்கான காசோலை மற்றும் பதிவேடுகளையும் எடுத்துக்கொண்டு, தலைவரிடம் கையொப்பம் பெறுவதற்காக, நைனார்குப்பம் கிராமத்தில், தொ.வே.கூ.க.சங்கத்தின் தலைவர் நந்தகுமாரின் உறவினரான ரங்கநாதன் [A-2] வீட்டில் இருந்த தலைவர் நந்தகுமாரை சந்திக்க சென்ற போது, ரங்கநாதன் என்பவர், மனுதாரர் திலகவதியிடம் "நீ பணம் தராததால் தான், தலைவர் உன்னுடைய செக்குல கையெழுத்து போடாம இருக்காரு, நீ என்ன முடிவு செய்திருக்க" என கேட்டும் , "தலைவர் கேட்ட ஒரு லட்சத்தை கொடுத்துவிடு, நான் கையெழுத்து வாங்கி கொடுத்துவிடுகிறேன்" என கூறியுள்ளார். தொ.வே.கூ.க.சங்கத்தின் தலைவர் நந்தகுமார் புகார்தாரர் திலகவதியிடம் "நீங்க எவ்வளவுக்கு செக் போட்டு இருக்கீங்க" என கேட்டுவிட்டு, முதலில் எட்டு லட்சம் செக்கை எடுத்துட்டு போங்க, கேட்ட பணத்தை கொடுத்துட்டு இன்னொரு செக்கை வாங்கிக்குங்கனு" என தெரிவித்து, பணி ஓய்விற்கான உத்தரவு மற்றும் ரூ.8,21,878/– க்கான செக்கில் மட்டும் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். மனுதாரர் திலகவதி, ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பிற்காக வழங்கப்பட வேண்டிய செக்கிலும் கையொப்பம் போட்டு கேட்ட போது, அங்கிருந்த ரங்கநாதனின் மனைவி தங்கம்மாள் [A-3], " எட்டு லட்ச ரூபாய் செக்கினை வங்கியில் போட்டு பணம் எடுத்ததும், ஒரு லட்ச ரூபாய் பணத்தினை கொண்டு வந்து நந்தகுமாரிடம் கொடுத்துவிட்டு, இன்னொரு செக்கினை வாங்கி கொள்ளுங்கள் " என கூறியுள்ளார். மனுதாரர் திலகவதி, புகார் மனுவுடன் இணைத்து அனுப்பி உள்ள குறுந்தகட்டில் உள்ள மேற்படி நிகழ்வின் உரையாடல்கள் பதிவுகள் குற்றச்சாட்டினை உறுதிபடுத்தும் விதமாக உள்ளது.

மனுதாரர் திலகவதி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வு கால பணத்தினை வழங்குவதற்காக, ஒரு லட்சம் ரூபாய் லஞ்சமாக கேட்ட குற்றத்திற்காக, நந்தகுமார் [A-1], த/பெ நல்லதம்பி, தலைவர், நாராயண நயினார்க்குப்பம் [N.N.குப்பம்] தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மருவாய் கிராமம், கடலூர் மாவட்டம் என்பவர் மீது,

S. Elalu
07/10/2020
Inspector of police
V&AC, CUD.,

Sec 7 of the prevention of corruption (Amendment) Act 2018 ன் படியும், குற்ற அலுவலர்–1 ன் செயலுக்கு உடந்தையாக இருந்த தனிநபர்களான ரங்கநாதன்[A-2] மற்றும் தங்கம்மாள்[A-3] ஆகியோர்கள் மீது Sec 12 of the prevention of corruption (Amendment) Act 2018–ன் படியும் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

எனவே, நான் இன்று 07.10.2021 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு, மேற்படி குற்ற அலுவலர்கள் மீது, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.13/2021 சட்டப்பிரிவுகள் Sec 7 மற்றும் 12 of the prevention of corruption (Amendment) Act 2018 ன் படி வழக்கு பதிவு செய்கிறேன்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், தலைமை குற்றவியல் நீதிதுறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்கு), கடலூர் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கு கோப்பில் வைக்கப்பட்டது.

S. [signature] 07/10/2021
Inspector of police
V&AC, CUD.